IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No. 369 of 2023

Deposition of witness for

PW4 (LW4)

Name : Thiru. Siva

Father's Name :

Age :

Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of June 2025 .

30.06.2025

PW4 முதல் விசாரணை

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ராஜி ஆஜர்

நான் கதவிலக்கம் எண்.527, எச் பிளாக் , சுனாமி குடியிருப்பில் வசித்து வருகிறேன். நான் ஸ்டீல் பட்டறையில் வேலை செய்கிறேன். நான் 3-வது வரை படித்திருக்கிறேன். தமிழ் எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போட தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. 08.01.2023 அன்று நானும் எனது நண்பர் விஜயும் தண்டையார்பேட்டையில் White Wash சம்பந்தமான பொருட்களை வாங்குவதற்காக ஆர்த்தி ஸ்கேன் சென்டர் அருகில் சென்று கொண்டிருந்த போது, காலை 08.00 (அ) 09.00 மணியளவில் எச்-1 காவல் நிலைய ஆய்வாளர் எங்களை அழைத்து தண்டையார்பேட்டை எம்.எம் தியேட்டர் அருகில் நடந்த விபத்து சம்பந்தமாக தெரியுமா என்று கேட்டார். நான் நேரடியாக விபத்தை பார்க்கவில்லை என்றும், விபத்து நடந்ததாக தெரிந்து கொண்டேன் என்றும் சொன்னேன். தான் சம்பவம் நடந்த இடத்தை வரைந்து எழுதிக் கொள்ள

இருப்பதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படியும் என்னை கேட்டுக் கொண்டார். நானும் அதற்கு ஒப்புக்கொண்டேன். என்னுடைய முன்னிலையில் தான் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது. அதற்கு ஆதரவாக என்னால் போடப்பட்ட சாட்சி கையொப்பம் தான் தற்சமயம் பார்வை மகசரில் முதலாவதாக காணப்பட்டது. அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2. என்னுடன் என்னுடைய நண்பர் கையெழுத்து செய்தார். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

போலீஸார் என்னுடைய முன்னிலையில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. கையெழுத்து மட்டும் போலீஸார் கேட்டு கொண்டதன் பேரில் போட்டேன்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

30.06.2025

III Addl. Sessions Judge.
III Addl. Court.